**IN THE COURT OF III ADDITIONAL CITY CIVIL COURT,**

**CHENNAI - 600 104.**

O.S. No. 3069/2014

Depositi of witness for PW1

Name : Ravikumar

தேதி. 16.02.2021

---

PW1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி

பிரதிவாதி தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.2248/2014ல் தாவா நகல் Ex.B1 ஆகும். காசோலை எண்கள் 751691லிருந்து 751695வரை மற்றும் 24.11.2012 தேதியிட்ட 4 புரோ நோட்களையும் திரும்ப கொடுக்குமாறு மேற்படி அசல் வழக்கு எண்.2248/2014 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த அசல் வழக்கில் நான் என்னுடைய பதிலுரையை தாக்கல் செய்திருக்கிறேன். Ex.A2, 5, 6, 7 ஆவணங்கள் மூலம் பிரதிவாதி என்னிடம் 11லட்ச ரூபாய் கடன் பெற்றார் என்பதுதான் என்னுடைய வழக்கு. Ex.A2, 5, 6, 7 ஆவணங்கள் மூலம் பெற்ற கடனுக்காகதான் மீண்டும் A11லிருந்து 14 வரையான ஆவணங்களளை நான் பிரதிவாதியிடம் பெற்றேன் என்றால் சரிதான். Ex.A11 to 14 ஆவணங்களை பெறும்போது அதன் அடிப்படையில் பிரதிவாதிக்கு நான் கடன் எதுவும்

கொடுக்கவில்லை. பிரதிவாதி 4 காசோலைகளை கொடுத்தார். 10.3.2014ல் தான் பிரதிவாதி மேற்படி 4 காசோலைகளை என்னிடம் கொடுத்தார். 24.11.2012 அன்று பிரதிவாதி ரூ.16,750 என்னிடம் கொடுத்தார் என்பதற்கு பிரதிவாதி எந்த ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை. தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என் மனைவி மின்சார கட்டணத்திற்காக பிரதிவாதி கையெழுத்து வாங்கி சென்றது Ex.B2 ஆகும். என்னுடைய வழக்குரை பத்தி 18ல் என் மனைவி 27.11.2013ல் ஒரு ரசீது கொடுத்ததாக கூறியிருக்கின்றேன் என்றால் சரிதான். அந்த ரசீது என்னிடம் இல்லை.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

Dt:16.02.2021 III Addl. Sessions Judge.